விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 15 ஜுல்-கஜ் 23 இதழ் 230

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-10-83

மேற்கு ஜெர்மனியின்

## யாழ் அபிவிருத்தி திட்டம் கைவிடப்பட்டது

### இனக்கலவரத்தின் எதிரொலி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேற்கு ஜெர்மன் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட இருந்த பாரிய அபிவிருத்தித் திட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்ற இனக் கலவரம் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மன் அபிவிருத்தி நிறுவனத்தினுல் யாழ். மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி கைத்தொழில், ஆகிய துறைசளில் பலகோடி ரூபா செலவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குகென அங்கீகாரம் வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்தின் சார்பில் திரு. போல் ஜே. பென்டிக்ஸ் மேற்கு ஜெர்மனியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடந்த ஜுன் மாதத்தில் விஜயம் செய்து பூர்வாங்க ஆலோசனைகளை நடத்திவிட்டுநாடுதிரும்பியிருந்தார். திரு. பென்டிக்ஸ் இத்திட்டம் குறித்து யாழ். அபிவிருத்தி சபைத்தலைவர், யாழ். அரசாங்க அதிபர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், மற்றும் நிதிஅமைச்சு, திட்ட, திட்டஅமுலாக்கல் அமைச்சுக்

(8ம் பக்கம் பார்க்க)

திருவனந்தபுரத்தில் சிவசிதம்பரம் அறிவிப்பு:

# சட்டமறுப்பு இயக்கம் நடத்த கூட்டணி திட்டம்!

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக்கூட்டணி விரைவில் சட்டமறுப்பு இயக்கமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அதன்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்றுத் தெரிவித்தார்.

தற்போது இந்தியாவில் இருக்கும் திரு. சிவசிதம்பரம் நேற்றுத் திருவனந்தபுரம் சென்றபோது, இதனை அங்கு தெரிவித்தார்.

தாம் விரைவில் இலங்கை திரும்பவுள்ளதாகவும், தனக்கு அங்கு என்ன நேரும் என்று தம்மால் சொல்லமுடியாது உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியுடனை பேச்சு வார்த்தையைக் காலதாமதப்படுத்துவதனுல், சிங்கள மக்களை ஒன்று படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கிறதென்றும், இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதனை மறுக்க வாய்ப்பு அளிக்கிறதென்றும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்துவதை விரும்பாததினுலேயே சிறப்புப்பிரதிநிதியுடனை பேச்சுவார்த்தையைத் தவிர்க்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் அவர் சொன்னர்.

அகதிகளாகவந்த

## விஞ்ஞான பட்டதாரிகளுக்கு வெளிநாட்டில் வேலை!

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களை அடுத்து இடம்பெயர்ந்த விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கும் வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை அகதிகள் புனர்வாழ்வு

(8-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அமைச்சர் ஜே. ஆரைச் சந்தித்தார்!

(கொழும்பு)

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. கஸ்பர் வைன்பேசர் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுச் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பின்போது அமெரிக்காவின் இலங்கைத் தூதுவர் திரு. ஜோன் எச். றீட்டும் கலந்துகொண்டார்.

சீனவிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் செல்லும் வழியிலேயே அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரும், அவரது குழுவினரும் கொழும்பில் தங்கி நின்றனர்.

விமானத்திற்கு எரிபொருள் நிரப்பும் பொருட்டே இவர்கள் கொழும்பில் தங்கினர்.

ஜனதிபதி ஜெயவர்த்தனவிற்கும் அமெரிக்க பாதுகாப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் அரசு பேச்சு நடத்தவேண்டும்"

### சமசமாஜக்கட்சி அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இடம் பெற்ற இனக்கலவரங்களுக்குப் பொறுப்பானவர்கள் எவ்வளவு உயர்ந்த இடத்திலிருந்தாலும் அவர்கள் அனைவரையும் அரசாங்கம் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தை கேட்டுள்ளது.

சமசமாஜக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் திரு. சொய்சா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலைகுறித்து தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இப்பேச்சுக்கள் இனவாதப் பிரசாரங்களைக் கைவிட்ட நிலையிலேயே நடத்தப்பட வேண்டும்.

இனக்கலவரங்களின் போது உடைமைகளை இழந்தவர்களுக்கும் உயிரிழந்தவர்களின்

[8ம் பக்கம் பார்க்க]

## எம். பி. பி. எஸ். பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடக்காது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களிலிருந்து பாதிக்கப்பட்டுவந்த மருத்துவபீட மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சை ஒரு மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அது ரத்துச்செய்யப்பட்டுஅந்தந்தப் பல்கலைக்கழகத்திலேயே பரீட்சைகள் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நவம்பர் முதலாம் திகதியும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நவம்பர் 8ம் திகதியும் மருத்துவ இறுதியாண்டுப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சை எழுதும் மாணவர்கள் தங்குவதற்கு பாதுகாப்பு மற்றும் வசதிகள் செய்துகொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்றுமுன்னர் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. (மா-கு)

## அகதிகளுக்கு வழங்கும் பொருட்களில் மோசடி!

(யழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ளவர்களுக்கென வழங்கப்படும் உணவுப் பொருட்கள், உடுபிடவைகளை பாதிக்கப்படாதவர்களும் பொறுவதற்கு விண்ணப்பித்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம்மோசடியில் சில உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

சில அகதிகள் முகாம்களிலும், அகதிகளுக்கு வழங்கப்படவிருக்கும் பொருள்களும் மோசடி செய்யப்படுவதாகப் புகார்கள் செய்யப்பட்டுள்ளது.

இப்படித் தவருன செயல்களில் ஈடுபட்டவர்களில் பலர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிவிசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

உண்மைக்கு மாருன தகவல்

(8ம்பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## தாமோதரம்பிள்ளை ஞாபக முத்திரை இன்று வெளியீடு!

(யாழ்ப்பாணம்)

இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையின் ஞாபகார்த்த முத்திரை இன்று காலை 8-45 மணியளவில், யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் வைபவரீதியாக வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். மகேஸ்வரன் யாழ். பிரதான தபால் அதிபர் திரு. எஸ். பி. ஞானப்பிரகாசம், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகி

(8-ம் பக்கம் பார்க்க)

இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, ஸ்பெயின்,கனடா, ஹோலண்ட், சிங்கப்பூர்,அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்கு சிரமமின்றிச் செல்வதற்கான ஆலோசனைகளும், விமான ரிக்கற்றுகளும், பிரயாண ஒழுங்குகளும் துரிதமாகச் செய்துகொடுக்கப்படும்.

**எயார்-ட்ராண்சிற்** **AIR-TRANSIT**

பயண ஆலோசகர்கள் TRAVEL-CONSULTANTS

538 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

99—2/56B கபூர் பில்டிங்,2-வது மாடி, கொழும்பு- 1. போன்: 549365

(8987)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டைச் சந்தியில் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு முன்பாக ஐந்து பரப்பு நிலமும், கட்டிடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு வெ. யோகீஸ்வரன் வட்டுக்கோட்டை தொலைபேசி 229 வட்டுக்கோட்டை அல்லது தி. வெற்றிவேற்பிள்ளை ஈழநாடு. 9001

4½ பரப்புக்காணி, கிணறு கல் வீடு வான்பயிர் உட்பட நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கருகாமையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; C/o ஈழநாடு விளம்பர இலக்கம் 9020 யாழ்ப்பாணம். 9020

யாழ் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணியுடன் வீடும் கிணறும் விற்பனைக்குண்டு. 27/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9018

யாழ். ஸ்ரான்லி ரோட்டில் ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில் வர்த்தக ஸ்தாபனங்களுக்குத் தகுந்த இடத்தில் 1 1/4 பரப்பு காணியும், கடையுடன் கூடிய இன்னொரு 1 1/4 பர. காணியும்விற்பனைக்குண்டு விபரங்கட்கு: P. திருஞானசம்பந்தன் நாவற்குழி, கைதடி. 9013

98ம் இலக்கம் செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்கு உரிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் விற்கப்படும் விபரங்களுக்கு நேரில் வரவும். 9012

ஒரு நபர் மட்டும் பாவித்த Delica வான் 34 ஸ்ரீ மிகவும் நல்ல நிலையில் (புது ரயர்கள், புது பற்றரி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளுங்கள். பென்சமின் 83, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 23304 9011

நாரந்தனைதெற்குஉபதபாற் கந்தோருக்கு அண்மையில் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைசெல்லும் 779 பஸ் வீதியில்ஒரு ஏக்கர்காணியும் வீடும் விற்பனைக்குஉண்டு. தொடர்பு சூ. அ. சிங்கராயர் 24. தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 8965

பேப்பர் வெட்டுதற்கும் கொப்பி வேலை செய்வதற்கும் சிறந்த கட்டர் விற்பனைக்கு உண்டு. விபுலானந்த அச்சகம் 248/5 கே. கே. எஸ். வீதி, யாழ்நகர். 8984

காங்கேசன் துறையில் 1½ பரப்பு காணி வீட்டுக்கு அத்திவாரம் போட்ட நிலையில் கிணற்றுடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: K. A. கனகரத்தினம் 225, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை. 9032

யாழ்ப்பாணத்திலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள சங்கரத்தையில் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு அண்மையில் குழாய்நீர், மின்வசதி பஸ் போக்குவரத்து வசதியுடன் இருபது பரப்பு காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்.) விபரங்கட்கு: உரிமையாளர் சாந்தி மில் வட்டுக்கோட்டை. 9033

சுண்டிக்குளி, ஆஸ்பத்திரி வீதியில் ஒரு பரப்புக் காணி கிணற்றுடன்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 3, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி. 9006

## விற்பனைக்கு

வவுனியாவில் ஸ்ரேசனுக்கு அருகாமையில் அரை ஏக்கர் காணியில் நல்ல கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. யோகநாதன், 'யோகவாசா', புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 8968

30 பரப்புக்காணி கிணற்றுடனும், ஏனைய பயன்களுடனும் விற்பனைக்குண்டு. பிரதான வீதியோரமாக இருக்கின்றது. அருகே ஒழுங்கை உண்டு. ஒழுங்கையை நோக்கி பலதுண்டுகளாக சிரமமின்றிப் பிரிக்கலாம். அச்சுவேலி சென் ஜோசப் தேவாலயத்துக் கருகில் அமைந்துள்ளது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9044 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9044

Akai Stereo Radio / Casette Model A C 3500 அக்காய் ஸ்டீரியோ றேடியோ கசெட், ரலீ சைக்கிள், புதிய TDK வீடியோ கசெட் எலெக்ரிக் ஷேவர் விற்பனைக்குண்டு. 170, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் 8999

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள், மெதடிஸ் பெண்கள் பாடசாலைக்கு அருகில், ஆலடிப் பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறமாக, காட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அண்மையில் வீடுகட்ட தண்ணீர்வசதியுடன் கூடிய 2¾ பரப்பு உறுதிக்காணி பரப்பு30,000 ரூபா வீதம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆ. ந. இராமச்சந்திரன், சட்டத்தரணி, தம்பசெட்டி ரோட், பருத்தித்துறை. 8996

## கல்வி

வயரிங், மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 3-10-83-ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்புகொள்க: பொறியியல் கல்வி நிலையம், (Engineering Education Centre), யாழ்ப்பாணக் கல்வி நிலையக் கட்டிடம், சாந்தி தியேட்டர் அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B.Sc. (Cey.), Electrical and Automobile Engineer. 8979

## சோதிடம்

மகாதேவா ஜோதிடம் அதிர்ஷ்ட எண் - பெயர் மாற்றம், ஜாதக சோதிடம், மகாதேவா, 140, செல்லர் வீதி, நல்லூர். (கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில்). 8958

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே.பியை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 8855

## வகுப்புகள்

மேற்படி வீணை வகுப்புகள் எதிர்வரும் விஜயதசமியன்று ஆரம்பமாகும். யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் டிப்புளோமா பயிற்சியை முடித்துக்கொண்டு இந்தியாவில் கர்நாடக இசைக் கல்லூரியில் சங்கீத வித்துவான் பட்டம் பெற்றுத் திரும்பிய செல்வி மடோனா ஜேம்ஸ் அவர்களால் 31, மவுண் காமல் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஆரம்பிக்கப்படும். பயிற்சிபெறவிரும்புவோர் தொடர்புகொள்ளவும். 9035

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்காக துரித மோட்டார் மெக்கானிக், எலக்றிக்கல் வயறிங், வெல்டிங் பயிற்சிகள் 10-10-1983-ல் ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11-B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9034

## வாடகைக்கு

மிகப் புதிய தமிழ் சினிமாப் படங்கள் - வீடியோ கசெற் - முந்தானை முடிச்சு, சலங்கை ஒலி, மலையூர் மம்பட்டியான், அதிசயப் பிறவிகள் இன்னும் பல - மிகத் தெளிவான பிரதிகள் - துர்க்காஸ் 68, கே. கே. எஸ். வீதி, சுண்ணாகம். 9029

## SERVICE

Rebuilding or Repairing of buildings in Colombo affected by recent disturbance. Apply 834, Hospital Road, Jaffna. Telephone: 22029. 8997

## சேவை

மில்க்வைற் நீலசோப் உறை 50 அல்லது சுப்ப மில்க்வைற் நீலசோப் உறை 10ஐ அனுப்பி துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரின் வர்ணப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற்- யாழ்ப்பாணம். 8977

## தேவை

ஓய்வுபெற்ற அரசாங்க கௌரவமான உத்தியோகத்தருக்கு யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உடனடியாக தேவை. Telephone: 23401, The Manager, Office Equipment Ltd, 34, K. K. S. Road, Jaffna. 9008

சகல மரத்தளபாடங்களும் செய்வதற்கு அனுபவமும் திறமையும்பெற்ற தச்சுவேலைத் தொழிலாளர்கள் உடன் தேவை. நேரே வரவும். 63, புங்கன்குளம்வீதி, கொழும்புத்துறை, 9026

அனுபவமும் திறமையும் மிக்க லொறிச்சாரதி (Driver) தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9025

வேளாள குலத்தில் பிறந்த நற்பண்பு உள்ள I. C. M. A. 1st and 2nd Part சித்திசெய்து தொடர்ந்து படிப்பதற்காக லண்டன் செல்ல இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகளும் படிக்க தொழில்பார்க்க லண்டன் செல்லவிரும்புவராய் இருத்தல் விரும்பத்தக்கது. குலம், கோத்திரம், ஜாதகம் பார்க்கப்படும். இலக்கம் 9021 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9021

அரசினர் தச்சுத் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற அல்லது தச்சுத்தொழிலில் குறைந்தது இரண்டு வருட அனுபவமுள்ள தொழிலாளர் உடன் தேவை. மாதாந்த வேதனம் வழங்கப்படும். தொடர்பு கொள்க. 47, உடுவில் ரோட், மானிப்பாய். 9016

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


### வெற்றிடங்கள்

"JUKI" மெஷினில் தையல் அனுபவமுள்ள பெண்கள் தேவை.

திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும், அல்லது நேரில் வரவும்.

**நிற்வெயர் லிமிட்டட்**

2, அதிகார் ஒழுங்கை, கோப்பாய்.

(9014)

### காணிகள் விற்பனவு

1. யாழ்ப்பாணம் இராசபாதையில் 6 பரப்புக் காணி.
2. உடுவில் மருதனுமடத்தில் 4 பரப்புக் காணி.
3. உடுவில் ஆலடி) 4 பரப்புக் காணி.
4. யாழ். பலாலி நாவலர் வீதி அண்மையில் 2 பரப்புக் காணி. (நாலு பக்கமும் சுற்று மதிலுடன்)
5. யாழ். அரியாலை யூதா கோவிலடியில் 10 பரப்புக் காணி.
6. யாழ். கொழும்புத்துறை துண்டி ரோட்டில் 11 பரப்பு.

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

### அகதிகட்கு வேலைவாய்ப்பு

நடுத்தர வயதுடைய கமத்தொழிலனுபவமுள்ள குடும்பப் பொறுப்பற்ற ஒருவரும், இளம் குடும்பத்துடன் இன்னுமொருவரும் குடாநாட்டிலுள்ள எமது உணவு, விவசாய ஸ்தாபன பண்ணைகட்கு கூலிவேலைக்கு உடனே தேவை.

நாற்று மேடை வேலை, திராட்சை செய்கை, கோழிப்பண்ணை, கால்நடை வளர்ப்பில் அனுபவமுள்ளோர் மிகவும் விரும்பத்தக்கது.

இருப்பிட வசதியுடன், நியாயமான ஊதியமும் வழங்கப்படும்.

அகதிகள் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். உடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 389,
C/O ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

### The Ladies' Academy

NO: 27, 3-வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**DIPLOMAT பயிற்சி**

குறுகிய காலப் பயிற்சி நடைபெறுகின்றன.
பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★ SCIENTIFIC CUTTING ★ CAKE ICING
★ SHORT EATS ★ HAIR STYLE
★ FLOWER MAKING

சேர விரும்புவோர் ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்பு கொள்க.

★ பெண்களுக்கேற்ற உடுப்புக்களுக்கும், திருமண, பிறந்த தின கேக் வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக கொள்ளப்படும்.

9015

### பௌதிக வகுப்புகள் — G. C. E. A/L 84 / 85

கொழும்பின் பிரபல ஆசிரியர்
V. Sundaramoorthy Bsc. Engயின்
வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

85 வகுப்புகள் —

| | | |
|---|---|---|
| சனி | 2-00 — 4-00 பி. ப | ஒளியியல் பொறியியல் |
| ஞாயிறு | 3-00 — 5-00 பி. ப. | |
| திங்கள் | 4-00 — 5-30 பி. ப. | ஒளியியல் பொறியியல் |
| செவ்வாய் | 4-00 — 5-30 பி. ப. | |
| புதன் | 4-00 — 5-30 பி. ப. | |

84 வகுப்புகள் —

| | | |
|---|---|---|
| சனி | 7-30 — 9-30 மு. ப. | ச்டப் பொருளியல் மின்னியல் காந்தவியல் |
| ஞாயிறு | 7-30 — 9-30 மு. ப. | |

84 துரிதமீட்டல் ஆரம்பம்: 1-10-83 காலை 10-00

| | |
|---|---|
| சனி | 10-00 — 12-00 மு. ப. |
| ஞாயிறு | 10-00 — 12-00 மு. ப. |

குறிப்பிட்ட மாணவருக்கு மட்டுமே இடமுண்டு.

521/11, பருத்தித்துறைவீதி, நல்லூர்.

(9010)

## ★ சோவியத் மனிதாபிமானமற்ற நாடாஞல் அமெரிக்காவில் நீக்ரோக்கள்

# நடத்தப்படும்முறை மனிதாபிமானமா ?

## நியூயோர்க் நிருபருக்கு இந்திரா பதிலடி

நியூயோர்க், செப் 30

'தென்கொரிய 'போயிங்' விமானம் சுடப்பட்டது தொடர்பாக சோவியத் யூனியனை அமெரிக்கா மனிதாபிமானமற்ற நாடு எனக் கூறி வருகிறது. அதே அமெரிக்காவில் 'நீக்ரோ' இன மக்கள் உரிமைகளற்று பெரும் சோதனைக்குள்ளாகிவருகின்றனர். எனவே அமெரிக்காவில் நடப்பது மட்டும் மனிதாபிமானத்துக்கு மாருனதாகமாட்டாதா?'

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நியுயோர்க்கில் செய்தி நிருபர்கள் மகாநாடொன்றில் நிருபர் ஒருவரின் கேள்விக்கு சுடச்சுடப் பதிலளித்தார்.

'சோவியத்யூனியன் தென்கொரிய போயிங் விமானத்தை சுட்டு வீழ்த்தியதை பல நாடுகள் மனிதாபிமானத்துக்கு முரணுன செயல் என்று கண்டித்துள்ள அதேவேளையில் இந்தியா மட்டும் ஏன் அச்சம்பவத்தைப் பலமாகக் கண்டிக்கவில்லை?' என நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பியபோதே திருமதி காந்தி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

திருமதி காந்தி இக்கேள்வி பற்றி மேலும் தெரிவிக்கையில், தென்கொரிய விமானம் சுடப்பட்டதைஅடுத்து சோவியத் யூனியனைக் கண்டித்து வரும் நாடுகள் சிலி, நிக்கரகுவா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மக்கள் மனிதாபமானமற்ற முறையில் நடத்தப்படுவது குறித்து ஏன் கண்டிக்கவில்லை?' என்றும் வினவினுர்.

இரட்டைவாதம் பேசுவது ஒருபோதும் நல்லதல்ல என்று கூறிய திருமதி காந்தி சகல மனிதாபிமானமற்ற சம்பவங்களையும் பாகுபாடு எதுவுமின்றி கண்டிக்க வேண்டுமென்றும் கூறினுர்.

### பாக். உள் விவகாரங்களில் இந்தியா தலையிடவில்லை

பாகிஸ்தானின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறதாகக் குற்றஞ்சாட்டப்படுவது பற்றிக் கேட்டபோது பாகிஸ்தானில் முதுபெரும் காந்தியவாதி கான் அப்துல்கான்கபார்கான் சிறைவைக்கப்பட்டது குறித்தே இந்தியா கவலை தெரிவித்ததாகவும் வேறெந்த விதத்திலும் இந்தியா பாகிஸ்தானின் விவகாரங்களில் தலையிடவில்லை என்ருர்.

இந்தியா அணுகுண்டுகளை தயாரிக்கின்றதா? எனக் கேட்டதற்கு இந்தியா ஒருபோதும் அதைத் தயாரிக்கமாட்டாதென்றும், இந்தியாவின் அயல் நாடான சீன அணுகுண்டுகளை வைத்திருக்கிறதென்றும், பாகிஸ்தான் அனுகுண்டுகளைத் தயாரிப்பதில் அக்கறைகொண்டுள்ளதென்றும் திருமதி இந்திராகாந்தி பதிலளித்தார்.

இந்தியா எக்காரணம் கொண்டும் அயல்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாது என்றும் உறுதியாக அவர் பதிலளித்தார். (கி)

---

## பாகிஸ்தான் கலவரங்கள்

# 40 பேர் மரணம்!

## படைவீரர் 5 பேர் பலி!!

இஸ்லாமாபாத், செப். 30

பாகிஸ்தானின் சிந்து மாகாணப் பகுதியில் ஏற்பட்ட கலவரங்களில் 40 பேர் கொல்லப்பட்டனர். இம்மாகாணத்தின் நவாப்ஷாஎன்ற நகரத்திலேயே கலவரங்கள் அதிகமாகவிருந்தன

இங்கு நகரசபைத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் கலகஞ்செய்தனர். இவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். 5 பாதுகாப்புப்படை வீரர்களும் கலகக்காரர்களால் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியை எதிர்த்து கலவரங்களில் இறங்கியுள்ள மக்கள், பாகிஸ்தான் அரசாங்கத்தினுல் நடத்தப்படும் நகராட்சித் தேர்தல்களை பகிஷ்கரிக்கும்படி கோரியே தமது கலகங்களை மேலும் பல இடங்களுக்கு விஸ்தரித்துள்ளனர். சில இடங்களில் நகரசபைத் தேர்தல் வாக்களிப்பு நன்கு நடைபெற்றன என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனுல் எதிர்க்கட்சிகள் வாக்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தன என்று தெரிவித்துள்ளன. (கி)

---

## 2-வது டெஸ்ட்டும் சரிசமம்

### கைக்குவாட் – 201

ஜலந்தர், செப் 29

இந்திய பாகிஸ்தான் 2-வது கிரிகெட் டெஸ்டும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

டெஸ்ட் வரலாற்றில் இந்தியாவுக்குக் கிடைத்த 100-வது வெற்றி-தோல்வியற்ற டெஸ்ட் போட்டி இதுவாகும்.

இந்திய ஆரம்ப துடுப்படி வீரர் கைக்குவாட் 201 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினுர். ரேஜர்பின்னி 54 ஓட்டங்களைப் பெற்ருர்.

125 ஓட்டங்களைப் பெற்றதுடன் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய பாகிஸ்தான் வீரர் வாஸிம்ராஜா சிறந்த வீரருக்கானவிருதைப் பெற்றுக் கொண்டார்.

ஸ்கோர் விபரம்: முதல் இன்னிங்ஸ் பாகிஸ்தான் 337 இந்தியா - 373.

---

### அகதிகள் முகாமில் சின்னமுத்து நோய்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் சுமார் 25 பேர் சின்னமுத்து நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வாழைப்பழம், செவ்விளநீரும் மிகவும் அவசியம் தேவைப்படுவதால், பொதுமக்களிடமிருந்தும், வேறு ஸ்தாபனங்களிடமிருந்தும் இவ்வாருன உதவிகளை முகாம் நிர்வாகிகள் மிகவும்அவசரமாகக் கோரியுள்ளனர்.

---

## பெய்ரூட் விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது

பெய்ரூட், செப். 30

லெபனுனில் பெய்ரூட் சர்வதேச விமானநிலையம் நேற்றிரவு முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தது. பலத்த சண்டை காரணமாக கடந்த ஒருமாத காலம் இவ்விமான நிலையம் மூடப்பட்டிருந்தது.

லெபனுனில் தீவிரவாத அரச எதிர்ப்பு இயக்நங்களுக்கும், அரசாங்க தரப்பினருக்குமிடையே சமரசப் பேச்சுக்கள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன. இதனையடுத்தே விமானநிலையத்தை மீண்டும் திறப்பதென முடிவுசெய்யப்பட்டது.

பெய்ரூட் சர்வதேய விமான நிலையத்தில் பயணிகள் விமானங்களுக்கு மட்டுமே தற்போது இறங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் விமானநிலையம் கடந்த மாதம் நடந்த சண்டைகளின் போது மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

இவ் விமானநிலையம் திறக்கப்பட்டுள்ளதையடுத்து, லெபனுனில் இருந்து யுத்தபீதி காரணமாக வெளியேறிய லெபனுன் மக்கள் பலர் மீண்டும் நாடு திரும்பவுள்ளார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அரசுக்கெதிரான சக்திகளுககும், அரசு தரப்பினருக்குமிடையிலான பேச்சுக்கள் சுமுகமாக நடந்து வருகின்றன. இருதரப்பினரும் பல விடயங்களில் கருத்து ஒற்றுமை கொண்டுள்ளனர். (கி)

---

## தொடர்ந்தும் காசோலைமூலம் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர்களுக்கும் விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கும் கடந்தமாதச் சம்பளமும் பாதுகாப்பு நிலைமை காரணமாக காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக சம்பளப்பணம் காசோலைமூலம் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களை சிரமமில்லாமல் காசோலைகளை இலங்கை வங்கிக் கிளையில் மாற்றுவதற்கென தனியாக ஒருவிசேட பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விசேட லீவும் கடந்த 22-ம் திகதி வழங்கப்பட்டது. இதற்குப் பதிலாக கடந்த சனிக்கிழமைவகுப்புகள் இடம் பெற்றன.

இப்பயிற்சிக் கலாசாலையில் 350 ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர் — ஊழியர்கள் உட்பட சுமார் 30 பேரும் இருக்கிருர்கள்.

கடந்த ஜூலை 20ம் திகதி வழங்கப்படவேண்டிய சம்பளப் பணம், பாதுகாப்பு நிலைசீரில்லாததால் ஒருவாரகாலம் தாமதித்தே வழங்கப்பட்டது. கலாசாலை முதல்வர் திருமதி இ. ஆனந்தகுமாரசாமி, கல்விப் பணிப்பாளர் இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டுசம்பளத்தைகா சோலைமூலம்வழங்க ஏற்பாடு செய்திருந்தார். (மா)

---

## சட்டவிரோத கள், கசிப்பு விற்பனை; சந்தேகநபர் கைது!

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின்வேண்டுகோளுக்கமைய, யாழ். கலால் பகுதி உத்தியோகத்தர்களும், சங்க ஊழியர்களும் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது கொழும்புத்துறை நெடுங்குடம் வீதியைச்சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமாக கள், கசிப்பு விற்பனை செய்வதைக்கண்டுபிடித்ததுடன், கள், வடிசாரயம் என்பவற்றைக் கொண்ட பல பரல்களையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான கணபதிப்பிள்ளை சிவம்மீது வழக்குத்தாக்கல் செய்யப்படவிருப்பதாக கலால் பகுதியினர் சங்கத்திற்கு அறிவித்துள்ளனர். (க)

---

## ஊர்காவற்றுறை பகுதி அகதிகள்: அரச அதிபருக்குப் புகார்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையைசேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்தடவை மட்டுமே பங்கீட்டு பொருட்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் பாதிக்கப்பட்டவர்கள்மீது எடுக்கப்படும் அக்கறையும் கரிசனையும், இங்கு காட்டப்படாதது கவலையளிப்பதாகும்.''

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவிற்கு ஊர்காவற்றுறையை சேர்ந்த எஸ். அல்பிரட், எம். ஏ. அன்ரணி ஆகியோர் அனுப்பிவைத்துள்ள புகார் கடிதமொன்றில் மேற்கண்டவாறு புகார் செய்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், உத்தியோகத்தர்கள், ஊர்காவற்றுறை நகரப்பகுதி கிராமசேவையாளர் ஆகியோரின் ஒத்துழையாமை பற்றியும் அக்கறையின்மைபற்றியும் தங்கள் கவனத்திற்குகொண்டு வருகிறேம்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்கள் செல்லும் போது அகதிகளை துன்புறச் செய்யும் வகையில் தேவையற்ற குறிப்புகள் கூறப்படுகிறது. கலவரத்தின்போது தாங்கள்பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் இன்னும் எங்கள் நெஞ்சத்தைவிட்டகலாதிருக்கும் நிலையில் ஊர்காவற்றுறையில் உள்ள எங்கள் சொந்த மக்களால் இப்படி நடத்தப்படுவதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதுபற்றி உடன்நடவடிக்கை எடுத்து நிவாரணம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேம். (க)

---

### பங்குத்தந்தை இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

தாளையடி பங்குத் தந்தையாக கடமையாற்றிய அருட்திரு. இருதயதாஸ் அடிகளார் சில்லாலை பங்குத் தந்தையாக இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## இந்திய செயற்கைக்கோள் அக்15ல்பணிகளை ஆரம்பிக்கும்

புதுடில்லி, செப். 30

இந்தியாவின் பலநோக்கு இயற்கைக்கோளான 'இன்சார்ட் 1 பி' விண்வெளியில் வெற்றிகரமாக ஒரு மாதத்தைக் கழித்தது.

இச் செயற்கைற்கோளைத் தயாரித்த அமெரிக்காவின் விண்வெளி சாதன தயாரிப்புக் கம்பனியான 'போர்ட்' கம்பனி இக்கோள் தொடர்ந்தும் நல்லநிலையில் இயங்கிவருவதாக அறிவித்துள்ளது.

அக்டோபர் மாதம் 15ம் திகதியிலிருந்து இச் செயற்கைக்கோள் அதன் பணிகளை ஆரம்பிக்கும். சலஞ்சர் விண்கலத்தில் கொண்டு சென்று விண்வெளியில் இது இறக்கப்பட்டதும் ஒரு சில சிறிய கோளாறுகள் ஏற்பட்டபோதிலும் தற்போது உரிய இடத்தில் நின்று பூமியிலிருந்து விடுக்கப்படும் கட்டளைகளுக்கமைய கச்சிதமாக இன்சார்ட் செயல்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 15ந் திகதி இன்சார்ட் கடமைகள் ஆரம்பமானதும் இந்தியாவில் பல நோக்குத் திட்டங்கள் பல ஆரம்பமாகும். தொலைத்தொடர்பு, வானொலி, தொலைக்காட்சி சேவைகள் ஆகியனவற்றிலும், விவசாயம் கல்வித்துறைகளிலும் பல புதிய மாற்றங்கள் இப் பல நோக்குத் திட்டங்களின் கீழ் கொண்டுவரப்படும். (கி)

## மணிவாக்கு

''ஏழைகளின் துயரக்கண்ணீர் கண்டு எவன் ரத்தக்கண்ணீர் வடிக்கிருனே, அவனே மகாத்மா. மற்றவர்கள் துராத்மாக்கள்''.

— சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## சமாதானத் தீர்வு

எமது நேற்றைய தலையங்கத்தின் முடிவில் 'சமாதானத் தீர்வுக்கு இந்திராவின் உதவியே போதுமானதென்று' குறிப்பிட்டிருந்தோம்.

இன்று நாட்டின் தலைவர்களென்று தம்மைக் கருதிக்கொள்பவர்கள் பலர்மூளாத்தீயைத் தணிக்கும் தன்மையற்றவர்களாகக் காணப்படுகின்றனர்; இது எங்கள் தவக்குறைவு.

ஆடிக் கொடுமைகளில் கொலையுண்டவர்கள் அத்தனை பேரும் தமிழர்; ஆண், பெண், மாணவர், குழந்தைகள்; கொலையிலும் கொள்ளையிலும் தீவைப்பிலும் ஈடுபட்டவர் அத்தனை பேரும் சிங்களவர்.

நாட்டின் சிங்கள ஜனத்தொகையில் இவர்கள் ஒரு சிலரேயென்று சொல்லி, புள்ளிகள் 25,000 தொடக்கம் 250,000 வரைக்கும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; உண்மை நிலை இன்னும் தெரியாத விபரீதம் என்னே!

காரணகாரிய ரீதியில் ஒரு ஆழமான விரிவான விசாரணை நடத்தி ஒரு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க அரசு தீர்மானித்திருக்கிறதாகப் பேசப்படுகிறது.

சன்சோனி கமிஷன் தொடக்கம் லயனல் பெர்ணுன்டோ வரைக்கும் பல கமிஷன்கள், அறிக்கைகள், ஆய்வுகளை இந்த நாடு இவ்விடயம்பற்றி கண்டும்காணுமலும் மிகுந்த அனுபவம் பெற்றிருக்கிறது.

தமிழ் மக்களின் இன்றைய நிலைபரம் வெள்ளை அறிக்கையில் சாந்தமடைவதற்கில்லை.

ஒரு 'கறுப்பு' அறிக்கை, தமிழ் மக்களின் பரிதாப நிலைக்கு தக்க பரிகாரம் காண உதவாவிட்டாலும் உயிர்உடைமை இழந்தவர்களுக்கும், மீட்க முடியாத நிரந்தர துன்பத்துக்காளானவர்கட்கும் ஒரு அஞ்சலி போலாவது இருக்கும்; ஒரு தேசிய தியாக உணர்வை வளர்க்கும்.

இந்நாட்டு மக்களுக்கும், வெளிநாடுகளுக்கும், நாட்டின் மானத்தையும், ஆட்சியின் திறமையையும் மீட்கும் வகையில் புலமை மிகுந்த வெள்ளை அறிக்கை தயாரிப்பது அரசுக்கு இயலாத காரியமல்ல.

ஆனால் நேரடி சவால் சவாலாகவே இருக்கிறது; அதனைத் தீர்த்துவைக்கும் விசால அரசியல்ஞானமும், ஆத்மீக ஆற்றலும். இப்பிணக்குக் குரித்தான இரு தரப்பினருக்கும் அவசியம்.

வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுப் பிரயாணமும், பிரசாரமும் இருதரப்பினரையும் ஒருங்கு சேர்த்து ஆக்க பூர்வமான சூழ்நிலையை வளர்த்து அமைதி ஏற்படுத்துமாவென்பது இன்னும் பெருஞ் சந்தேகமாகவிருக்கிறது.

தக்கதூரத்திலிருந்து காய்தல் உவத்தல் இன்றி, அதே சமயம் அயல்நாடு திசை தவறிப் போகாத வண்ணம் அரசியல் முதிர்ச்சியும், ஆத்மீகஞானமும் நிறைந்த பாரத தேசத்தின் தலைவர் உதவலாம்; உதவ முன்வந்துள்ளாரென்பதே நாம் நேற்றுக் குறிப்பிட்டதற்குக் காரணம்.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் திறமைசாலிகள் இந்த ஆலோசனையை அவமதிப்பாரென்பது தெரிந்த விடயம்.

நாம் பொறுப்புள்ள சமுதாயத்தினருக்கே இதனை சமர்ப்பிக்கின்றோம்.

ஏற்கனவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களையும் கண்டனத்தையும் ஆதரித்து இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

பின்பு பாராளுமன்றத்தில் கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம இனக்கலவரம் பற்றி ஆற்றிய அரும்பெரும் உரையை வெளியிட்டிருந்தோம்.

இன்று வெளிவருவது லங்கா சமசமாஜக் கட்சியின் அறிக்கை.

இவையெல்லாம் மார்க்ஸிய வாதிகளின் பித்தலாட்டம் என்று கேலி பண்ணும் பேதைகள் பலர் ஆட்சியில் இடம் பிடித்திருக்கின்றனர். மார்க்ஸியவாதிகள் என்ருல் பஞ்சமரென்று கழித்து வைத்தகாலம் மலையேறிவிட்டது.

எமக்கு இன்று தேவையானது சமாதானத் தீர்வு; ஆட்சியைத் தீண்டுவதல்ல.

லங்கா சமசமாஜக் கட்சி குறிப்பிட்டதுபோல் மிக அவசியமானது அரசாங்கத்தின் ஆதரவில் தொழிற்படும் தனிப்பட்ட 'தாக்கும் படைகள்' ஒழிவதே!

உண்மையான அமைதிநிலை உருவானதும் அரசும் தமிழர் தலைவர்களும் எவ்வித இனக்குரோத பிரசாரத்தையும் கைவிட்டு பேச்சில் சமாதானத்தைக் காண வேண்டுமென்பதே அவசரமானது.

# சமஷ்டி ஆட்சி வேறு

## பண்டா — செல்வா ஒப்பந்தம் வேறு

தமிழரசுக்கட்சி ஆரம்பத்தில் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையைத் தமிழ்பேசும் மக்கள் முன் பிரசாரம் செய்து பல தேர்தல்களில் வெற்றிபெற்றது. இக்காலத்தில் சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாக திரு. எம். எஸ். காரியப்பர், திரு. முஸ்தபா போன்ற முஸ்லிம்களும் அங்கம் வகித்தனர்.

சமஷ்டி ஆட்சியில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் ஒன்றும், சிங்களப் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் ஒன்றும் இவர்களுக்கு உதவியாக மத்திய பாராளுமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டுத் தமிழ் பேசும் மக்களதும் சிங்களம் பேசும் மக்களதும் தனித்துவம், மொழி, குடியேற்றம் என்பன பாதுகாக்கப்படவேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியும் அதன் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகமும் வலியுறுத்தி வந்தனர்.

தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் பேசும் மக்கள் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்ததும், முன்னெப்பொழுதுமில்லாதவாறு யாழ்ப்பாணக் கச்சேரியில் சத்தியாக்கிரகமிருந்தும் ... க்கறையுள்ளவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். சமீபத்தில் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் பேசியபோது பண்டா செல்வா ஒப்பந்தத்தில் கூறப்பட்ட சமஷ்டி ஆட்சிமுறையை அப்போதும் எதிர்த்தேன் இப்போதும் எதிர்க்கிறேன் என்று பேசியிருக்கிருர்.

சத்தியாக்கிரக காலத்தில் தமிழரசுக்கட்சியின் இடைவிடாத எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது அப்போதைய பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழரசுக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி நான்கம் சத்திட்டமொன்றுக்கு உடன்பட்டிருந்தார். அத்திட்டம் சமஷ்டி ஆட்சிமுறையை எவ்விதத்திலும் பிரதிபலிக்கவில்லை.

பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் 13-8-57ம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை இங்கு தமிழாக்கம் செய்துள்ளேன்.

''தமிழ் சிங்கள மக்களிடையே தற்போது எழுந்துள்ள பதட்ட நிலையையும சந்தேகங்களையும் போக்குவதற்குத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் பிரதமமந்திரி பல தடவைகள் பேச்சுவார்த்தை நடாத்திஞர் தமிழரசுக்கட்சி பிரதிநிதிகளின்சில கோரிக்கைகளைப் பிரதமரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

### - புத்தொளி -

சமஷ்டஆட்சி முறையையோ பிரதேச சுயாட்சி முறையையோ அரசாங்க தரப்பால் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொளளப்படவில்லை. ஆனல் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமலும் தனது கொள்கைகளைப் பலியிடாமலும் மாற்றுத் திட்டமொன்றை ஏற்றுக்கொள்ள இருதரப்பிலும் இணக்கம் காணப்பட்டது. அரசாங்கம் கொண்டுவர இருக்கும் பிரதேச சபைகள்மூலம் சில அதிகாரங்களைத் தமிழ் மக்களுக்கு அளிக்கப் பிரதம மந்திரி முன்வந்தார்.

மொழிப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் தமிழரசுக் கட்சி சம அந்தஸ்த்துக்கொள்கையைச் சிறிதளவேனும் விட்டுக் கொடுக்க முடியாதெனத் தெரிவித்தது. சில மாற்று நடவடிக்கைகளைக் கையாளப் பிரதமர் முன்வந்தார். தமிழரசுக் கட்சியார் தமிழ் மொழியைத் தேசிய மொழியாக்கவேண்டும் என்றும் வட கிழக்கு மாகாணத்தில் தமிழ் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினர்

சிங்கள மொழிச் சட்டத்துக்கு மாருகத் தன்னல் எதனையும் செய்யமுடியாதெனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் பல தடவைகள் இரு தரப்பினரும் ஆலோசித்த பின்னர், தமிழ் மொழி தேசிய சிறுபான்மையினர் மொழி என்பதைச் சட்டத்தில் குறிப்பிடுவதென்றும் சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாதிக்காதவாறு வட கிழக்கு மாகாணத்தில் உத்தியோக மொழியாகத் தமிழையும் அங்கீகரிப்பதெனவும் ஒரு முடிவுக்குவந்தனர். இங்குள்ள தமிழ்த் தெரியாதவர்களின் நன்மை கருதி அவசியமேற்படில் புதிய சட்டம் கொண்டுவரலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களுக்கு சட்ட ஆக்கம் கொண்டுவருவதாகவும் உடன்பட்டனர்,

அ (1) தமிழ்மொழி தேசிய சிறுபான்மையினரின் மொழியாக அங்கீகரிக்கப்படுவது.

(2) வட கிழக்கு மாகாண அரச கரும மொழி தமிழாக இருக்கவேண்டும்.

ஆ. இச்சட்டங்கள் சிங்களம் மட்டும் உத்தியோக மொழி என்பதற்கு மாறுபட்டதாக இருக்காது பார்த்துக்

(5-ம் பக்கம் பார்க்க

# அண்ணு கொள்கைபரவினுல்

## அமைதியும் ஐக்கியமும் நிலவும்

(யாழ்ப்பாணம்)

''பேரறிஞர் அண்ணு அவர்களின் ஒருமைப்பாடடுத் தத்துவம் உலகம் முழுமையும் பரவுமேயாஞல் பிரச்சனைகளுள்ள நாடுகளில், குறிப்பாக இலங்கையில் பிரதிபலிக்குமேயாஞல் நிச்சயம் அன்பு தழைத்திடும், இன்பம் பொங்கிடும், ஐக்கியம் ஓங்கிடும், மக்கள் எந்தவித பேதமுமின்றி ஐக்கியமாகவும் அமைதியாகவும் வாழ்ந்திடுவர், உலவிடுவர்.''

இவ்வாறு தென்மராட்சி முத்தமிழ்க் கலைமன்றம் நடாத்திய பேரறிஞர் அண்ணு அவர்களின் பவளவிழாக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய திரு அ. பொ. செல்லையா கூறினர்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் 'இந்தியா ஒரு நாடல்ல; இந்தியா பல நாடுகளின் கூட்டான ஓர் உபகண்டமாகும். இந்த உபகண்டத்திலுள்ள பதினன்கு மாநிலங்களின் கூட்டாட்சியே இந்திய ஒன்றியமாகும். அந்த ஒன்றியத்தின் ஓர் அங்கமாகவே தமிழக அரசு விளங்குகிறது. இதனை உருவாக்கிய அண்ணு அவர்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்ற தனிநாட்டுக் கொள்கையின் தந்தையாவார்.

எனினும், ஒரு இனம் மற்ருேர் இனத்தை ஆளவோ' ஒருமொழி மற்ருேர் மொழியைஅழிக்கவோ, ஒரு கலாச்சாரம் மற்ருேர் கலாச்சாரத்தைச் சிதைக்கவோ, ஒருவரின் நிலத்தை மற்றவன் ஆக்கிரமிக்கவோ மான அமைப்பற்ற சுயாதீன ஆட்சிமுறையில் பாரத ஒன்றியம் மிளிர்ந்திட வேண்டும். அப்பொழுதுதான் இந்தியக் கூட்டாட்சியில் ஒரு நம்பிக்கையான பாதுகாப்பான முறையில் ஒவ்வொரு இனமும் மிளிர்ந்திட முடியும் என்ருர் அண்ணு. இந்திய ஒன்றியத்திற்கு அண்ணு கூறிய அரசியல் அமைப்பு முறை இலங்கைக்கும் சாலப் பொருத்தமாகும்

மாநில சுயாட்சிமுறைக்கு இந்திய அரசு காலத்துக்குக் காலம் வழிவகுத்திட்ட காரணத்தால் தனிநாடு கேட்டு அரசியல் சூருவளி நடாத்திய காஷ்மீர், தமிழ்நாடு போன்றவை யாவும் இந்திய யூனியனில் அங்கமாகஇருப்பது மட்டுமல்ல - தனிநாட்டுக்கொள்கையின் நாயகர்களாகிய அரசியல் தலைவர்கள், அறிஞர் அண்ணு உட்பட சகலரும் இந்திய ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்கள், பாடுபட்டுவருகிருர்கள். இந்திய அரசின் மனிதாபிமானத் தன்மைகள்

(5ம் பக்கம் பார்க்க)

# ஐ. சி. எம். ஏ.

## கணக்காளர் பரீட்சையும் தமிழ் மாணவர்களும்

கடந்த 15 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெறறுவந்த ஐ. சி. எம். ஏ. கணக்காளர்பரீட்சை கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ, த(உயர்தரம்) பௌதீக விஞத்தாள் அபகரிப்பு சம்பவத்தையடுத்து பரீட்சை ஆணையாளரின் சிபார்சின் பேரில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது நிறுத்தப்பட்டது. இதஞல் கடந்த வருடம் இங்குள்ள பரீட்சார்த்திகள் கொழும்பு சென்று பரீட்சைஎழுதவேண்டி நேரிட்டது.

ஆஞல் இன்றுள்ள சூழ்நிலையில் அங்குசென்று அமைதியாக பரீட்சை எழுதவோ, அல்லது அங்கு தங்குவதற்கோ ஏற்ற நிலையோ இல்லை. கடந்த வாரமும் கொழும்பு சென்ற பலர் தாக்கப்பட்டனர் என்றும் வேறு சிலர் மிரட்

### மக்கள் கருத்து

டப்பட்டுள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது. இந் நிலையில் எதிர்வரும் நவம்பர் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தையே பரீட்சைநிலையமாக தெரிவுசெய்த சுமார் 600 மாணவர்களுக்கு கொழும்பிலேயே பரீட்சை நடைபெறும் என ஐ. சி. எம், ஏ. நிறுவனம் அறிவித்துள்ளது. இதஞல் மேற்படி மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே கொழும்பு பேராதனை போன்ற இடங்களில் பயின்ற பல்கலைக்கழகப்பட்டதாரி மாணவர்மேற்படி இடங்களுக்கு சென்று பரீட்சை எழுதும் சூழ்நிலை இல்லை எனதமது நிலையை உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு விளக்கியதனை அடுத்து அவர்களின் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடாத்துவதற்கு உயர்கல்வி அமைச்சு இணக்கம்தெரிவித்துள்ளது. கொழும்பில் நடைபெறும் 3வது எம். பி. பி. எஸ். பரீட்சையையும் யாழ்ப்பாணத்திலும் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஆரம்பமான க. பொ த. (உயர்தரம்) பரீட்சையும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதியாக நடைபெறுவதாக பரீட்சை ஆணையாளரே பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐ. சி. எம். ஏ. பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தாமல்விடுவது நியாயம் அற்ற செயலாகும். இங்கு மேற்படி பரீட்சை நடைபெறுவது 2, 3 பரீட்சை நிலையங்களிலேயாகும். இவற்றிற்கு பாதுகாப்பு வழங்குவதில் அரசாங்கத்திற்கு எவ்விதசிரமமும் இருக்காது. தவிர இன்றுள்ள நிலையில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை, மற்றுப்பரீட்சைகள்அமைதியாகவே நடைபெற்றன. அவசியம் ஏற்படும் இடததில் இங்குள்ள மக்களே தொண்டர் சேவையின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்க முடியும். அண்மையில் ஆசிரியர்களே க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை நடைபெறும் இடங்களுக்கு பாதுகாப்பு வழங்க முன்வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இவ்விடயத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்படி பரீட்சை நடைபெறுவதற்கு பரீட்சை ஆணையாளர் லண்டன் ஐ. சி. எம். ஏ. நிறுவனம் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு இப்பகுதி மாணவரின் இக்கட்டான நிலையை விளக்கி இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிலையங்கள், அரசாங்க அதிபர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

S. பெனடிக்ற்
சண்டிலிப்பாய்.

# ‘பூனை’க்கு மணிகட்டுவது யார்? இந்திராஎன்கிறார் எம்.ஜி.ஆர்.

பூனைக்கு யார் மணிகட்டுவது?

இந்தக்கேள்விக்கு தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். மிக அழகாகப்பதில் சொன்னார்.

திருச்சியில் எம். ஜி. ஆர் தலைமையில் ஒரு திருமண வைபவம் நடந்தது! இவ்விழாவில் எம். ஜி ஆர் பூனைக்கு யார் மணிகட்டுவது என்ற கதையை விளக்கினார்.

''இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே ஒரு பூனை. அதற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திமணிகட்டுவார்! எனவே, ஜெயவர்த்தனே என்ற பூனை அதை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும்.!''

இலங்கைத் தமிழர்களுக்காக,

ஆகஸ்ட் 16 முதல் செப்டம்பர் 14ம் திகதி வரை-

விரும்பாது! அவர்களுக்கே திருப்பிகொடுத்துவிடும்!

''இலங்கைத் தமிழர்களை அழிக்க நினைத்தால் அதுபுத்தி சாலித்தனமாகாது.

இந்திரா காந்தி எந்தப்பிரச்னையில் ஈடுபட்டாலும், நேர்மையான, நியாமான காரியாலங்களில் ஈடுபடுவார். குரங்குகளுக்கு அப்பத்தைப் பூனை, கடித்துக்கடித்து 'பங்கிட்டுக் கொடுத்தது போல, இந்திரா செய்யமாட்டார்!''

இலங்கைத் தமிழர்களுக்கு துக்கம் தெரிவித்து, எம். ஜி. ஆரின் அ. தி. மு. க. கறுஞ்சட்டைப் போராட்டத்தை ஒருமாதகாலத்துக்கு நடத்தியது;

முதல்வர் முதல் சகல அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்களும், அந்தக்கட்சியைச்சார்ந்தவர்களும் கறுப்புச்சட்டை

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 7

அ. தி. மு. க. கறுப்புச் சட்டை அணிவதென்று தீர்மாணித்திருந்தது. இதற்கிணங்க, எம்.ஜி.ஆர் இத்திருமணத்துக்கு கறுப்புச்சட்டை அணிந்து வந்திருந்தார்!

### எம். ஜி. ஆரும் கறுஞ்சட்டையும்

இத்திருமண விழாவில் எம். ஜி. ஆர். சொன்னார்:

''திருமண வீட்டில் கறுப்புச்சட்டைஅணியலாமா என்று கேட்கலாம்! மாப்பிள்ளை கூட கறுப்புச்சட்டை அணியட்டுமா என்று கேட்டார்! நான்தான் அவரை அணியவேண்டாம். என்று சொன்னேன். இவ்விஷயத்தில் மணமக்களுக்கு விதிவிலக்களித்துள்ளோம். இலங்கைத்தமிழர்களுக்காக தமிழ்நாட்டுமக்கள் பொங்கி ஏழுந்து குமுறி ரத்தக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழ்மக்களின் நலன்காக்க நல்ல தீர்வுகாணத் தமிழகம் துடிக்கிறது!

''இந்தியாவுக்கு நாடுபிடிக்கும் ஆசை துளிகூட இல்லை. அப்படிப் படையெடுத்தாலும். அந்நாட்டின் அடிமண்ணைக் கூடஇந்தியாஎடுத்துக்கொள்ள

அணிந்து தமது உத்தியோகப் பணிகளுக்குச் சென்றார்கள்! பெண்கள் கறுப்புச்சேலை அணிந்தார்கள்!

வெண்தாடி வேந்தர் பகுத்தறிவுத் தந்தை என்றெல்லாம் அழைக்கப்பட்ட ஈரோடு பெரியார் ஈ. வே. ரா அவர்களின் கறுஞ்சட்டை படையைப் போல ஆனாலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு—

அனுதாபம் தெரிவித்து கண்டனத்தைக் காட்டுவதற்காக எம். ஜி. ஆர் இந்தக் கறுஞ்சட்டை அணியும் போராட்டத்தை நடாத்தினர்.

தமிழகத்தில் இந்தப்போராட்டத்துக்குக் குறிப்பிடக்கூடியளவு வரவேற்பு இருந்ததாகத் தெரியல்லை

### பொழுது சார்ந்த பின்னர் போராட்டம்

அனேகமான தமிழகப்பத்திரிகைகளில் இதற்கு ஆதரவு வழங்கப்படவில்லை!

இந்தப் கறுப்புச்சட்டைப் போராட்டத்தைப்பற்றி ஒரு தமிழகத்தினசரிப் பத்திரிகை எழுதிய ஆசிரிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''கறுப்புச்சட்டை அணிய வேண்டும். கறுப்புக்கொடி ஏற்றவேண்டும் என்று அ. தி மு. க. போக்கற்றுப்போன நிலையில் ஒரு முடிவெடுத்துப் பொழுது சாய்ந்த பின்னர் அதை நடைமுறைப்படுத்தி நகைச்சுவை அரசர்களாக தமிழ் மண்ணில் உலா வருவதைப் பார்த்ததும் இப்படித் தான் நமதுசிந்தனை விரிகிறது!

''இலங்கை மண்ணில் தமிழர் ரத்தம் கொட்டப்பட்ட செய்தி கிடைத்ததுமே துடித்துப்போய் தனது கண்டனத்தைத்தெரிவித்து முதல் கண்டன ஊர்வலத்தையும் நடத்தியது தி. மு க ''டில்லியிலுள்ள அன்னையாரின் திருமுகம் வாடி விடக்கூடாதே என்ற ஏக்கத்தைத்தவிர எம். ஜி. ஆருக்கு வேறு கவலை எதுவும் கிடையாது! எம். ஜி. ஆர். அரசியலிலும் நடிக்கிறார். மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள்! உதட்டுப் பேச்சுப் பயனில்லை: உதிரத்தில் கலந்த பேச்சாக இருக்க வேண்டும்!''

### பொலிஸ் தீர்மானம்

தமிழ்நாட்டிலுள்ள பொலிசாருக்கு சங்கம் ஒன்று இருக்கிறது. இந்தப் பொலிஸ் சங்கத்தின் தலைவராக அந்தோணிசாமி என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் இருக்கிறார். இலங்கைத் தமிழர் பிரச்னையில்;-

தொகுத்துத் தருபவர்: ஈ. கே. ஆர்.

இந்தச் சங்கம் கூடி எடுத்த முடிவுகள் வருமாறு;-

தமிழக அரசே! இலங்கைத் தமிழரைக்காக்க எங்களை அனுப்பு!

எங்களது ஆகஸ்ட்மாதச் சம்பளத்தில் ஒருநாள் ஊதியமான ரூ 12 லட்சத்தை பிடித்து பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்குக!

-இந்தத் தீர்மானங்கள் தமிழக அரசுக்கு அனுப்பிவைக்கப் பட்டது!

அ.தி.மு.க விலிருந்து விலகிய மேல்சபை அங்கத்தவர் இரா ஜனார்த்தனம் 'தமிழர் கட்சி' என்ற புதிய கட்சியை ஆரம்பித்து,

இலங்கைத் தமிழர்களுக்கு முழுநேரமும் உழைக்கப் போவதாக அறிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் பற்றிய சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டி. முழுநேரமாக உழைக்கக் கூடியவர்களைத் தனது இயக்கத்தில் சேரலாம் என்றும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக பதவியை உதறிவிட்டு வருபவர்களுக்கு தமதுகட்சியில் இடமுண்டு என்றும் ஜனார்த்தனம் சொன்னார்.

### உமா பேட்டி

தமிழ்நாட்டில் செல்வாக்குள்ள பாமரமக்கள் பத்திரிகையாக வெளிவருவது தினத்தந்தி என்ற தினசரி: சாதாரண 'ரிக்ஷோக்காரர்கள்' வாசிக்கக் கூடிய விதத்தில், இந்தப் பத்திரிகை நடத்தப்படுகிறது. இதனை ஆரம்பித்தவர் மறைந்த 'நாம் தமிழர் கட்சி'த் தலைவர் சி. பா, ஆதித்தனார்.

ஆதித்தனாரின் மருமகன் பின்னர் இப்போது தனித்து ஒரு பத்திரிகையை 'தினத்தந்தி' பாணியில் ஆரம்பித்துள்ளார். 'தினகரன்' என்ற இப்பத்திரிகையும் பாமரர்கள் செல்வாக்கைப் பெற்றுள்ளது.

இந்தத் தமிழகத் 'தினகரன்' தினசரிக்கு உமா மகேஸ்வரன் அளித்த பேட்டியொன்றில், அமிர்தலிங்கத்தைக் காரசாரமாகத் தாக்கியுள்ளார்.

அந்தப் பேட்டியில் உமா தெரிவித்துள்ள சில கருத்துக்கள்:

அமிர்தலிங்கம் என்றுமே இலங்கைத் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கப் போவதில்லை. அவரது கூட்டணியினரும் அப்படியே தான்! அமிர்தலிங்கத்தை நாங்கள் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை! இன்றைய நிலையில் பேச்சுவார்த்தையால் எந்தப் பயனும் ஏற்படாது!

''நாங்கள் நியாயம் கோரிப் போராடுகிறோம் என்பதை உலக நாடுகள் ஏற்க வேண்டும். எமது விடுதலையை நாங்கள் போராடித்தான் பெற வேண்டும்''. (இன்னும் வரும்)

"Diploma in Computer Programming in Collaboration with Dataserve"

BASIC - COBOL

BASIC — 3 மாதங்கள் (பயிற்சி நெறி உட்பட)

COBOL — 2 மாதங்கள் (பாட நெறி மட்டும்)

பயிற்சி: — B. B. C. GENIE } கலர் கொம்பியூற்றர்களில் அளிக்கப்படும்

கட்டணம்: BASIC- 1750-00 (பயிற்சிநெறி உட்பட)

COBOL- 750-00 (பாடநெறி மட்டும்)

(தவணை முறை வசதி அளிக்கப்படும்)

வகுப்புக்கள் ஆரம்பம்: 15-10-83

உளச்சார்பு பரீட்சை: 5-10-83ம், 8-10-83ம் நடைபெறும்

சலுகைகள்: புலமைப்பரிசில்கள், இலவச ஆங்கில வகுப்புக்கள்.

தொடர்பு:

COMTECK COMPUTER INSTITUTE

No. 82, 3rd Cross St. Jaffna.

# இடம்பெயர்ந்த தாதிகளை சொந்த இடத்தில் பணியாற்ற ஏற்பாடுசெய்க

## பொதுத்தாதிகள் சங்கம் அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அரசாங்க ஆஸ்பத்திரி தாதிகளை சொந்த மாவட்டங்களிலேயே பணிபுரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுத்தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் சுகாதார அமைச்சரைக்கேட்டுள்ளது.

இதுதொடர்பாக மேற்படி சங்க பொதுச்செயலாளர் திரு. ரி. சுதிர்காமதாஸ் சுகாதார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனக்கலவரங்களின் போது சிங்களப் பகுதிகளில் பணிபுரிந்த தாதிகளுக்கு அநேகமாக திருமணமாகாதவர்களுக்கு எதுவித பாதுகாப்பும் அரசினால் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அவர்கள் மீண்டும் அப்பகுதிகளுக்குச்சென்று பணிபுரிய அஞ்சுகின்றனர். எனவே அவர்களின் விருப்பத்தின்படி அவர்களது சொந்த மாவட்டங்களில் பணிபுரிய நடவடிக்கை எடுக்கவும்.

கொழும்பில் ஒன்றரை வருடத்தைப் பூர்த்திசெய்த தாதிகளுக்கு மிகுதியாக உள்ள 6 மாத காலத்திலும் யாழ்ப்பாணத்தில் பயிற்சியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

1-10-83 முல்லேரியாவில் ஆரம்பிக்கப்படஇருக்கும் தாதிகளுக்கான மன நோயாளர் பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யவும், உதவி வைத்திய அதிகாரிகள், வைத்தியமாணவர்கள் ஆகியோருக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளிக்கும் போது இத்தாதிகள் பயிற்சியையும் இங்கு அளிப்பது சிரமமாக இருக்காது என்றும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அண்ணா கொள்கை...

4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தலைவர்களுக்கு இருக்குமானால் இலங்கை ஐக்கியத்தைப் பற்றிச் சட்டம் போட்டுப் பேசிடத் தேவையில்லை.

வாழுகின்ற நாட்டுக்கு விசுவாசமாகவும், உலக ஒன்றியத்தின் சொந்தக்காரனாக, நம்பிக்கையானவனாக வாழவேண்டும் தமிழன் என்றாலும், என்றும் தமிழன் தனது தனித்துவத்தைப் 'பிறருக்கு விற்றுவிட ஒப்பியதில்லை என்றார். யாதும் ஊரே; யாவரும் கேளிராக வாழ்ந்து வாழுகின்ற நாடுமட்டுமல்ல உலக ஐக்கியத்தையே விரும்பி ஐக்கியத்தின் மகிமையை உலகுக்குக் காட்டியவனே தமிழன் என்றார் அண்ணா.

ஐக்கியம் நிலவிடவேண்டுமென்றால் சாதி, சமய இன வேறுபாடற்ற அன்பான, ஐக்கியமான, சமரச, சன்மார்க்க, ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயம் உருவாகிடவேண்டும் என்றார் அண்ணா.

மேலும், எதிர்காலச் சமுதாயம் நல்ல கல்விஅறிவு பெற்றவர்களாக வாழவேண்டும் என்றார், அதனால், மாணவ சமுதாயம் அரசியலில் பழுக்காத பழமெனக் கொண்டு கருமமாற்றிடவேண்டும் என்றார். மாணவர்கள் அரசியலில். கலந்திடக் காலம் வரும்வரை காத்திருக்கவேண்டுமேயன்றி, மாணவப் பருவத்தில் அரசியலில் கலந்து அறிவுச் சூனியர்களாக ஆகிவிடக் கூடாது என மாணவ சமுதாயத்தின் கல்வியில் மிக மிக அக்கறை காட்டி, அவர்கள் எழுச்சிபெறும் தமிழர் சமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்கிடவேண்டிய அறிவின் சிற்பிகளாக விளங்கிடவேண்டும் என்றார் அண்ணா.

மற்றும், சமூகமணி ஆர். ரி சுப்பிரமணியம், திரு. செ. மாறன் ஆகியோரும் பேசினர்.

## புகையிரதப் பகுதி ஊழியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியர்களின் கூட்டம் ஒன்று எதிர்வரும் 3ம் திகதி திங்கட்கிழமை காலை 9மணியளவில் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள இலங்கை மலாயா சங்கக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

## சமஷ்டி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வது.

இ. தமிழ்ப் பேசும் மக்கள் அல்லாதோருக்கு இப்பிரதேசத்தில் வேறுசட்ட ஆக்கங்கள் கொண்டு வருவது.

இதன் பின்னர் இருதரப்பினராலும் 4 அம்சக் கோரிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

கல்வி, அரசாங்க சேவை, தொடர்புமொழி, உள்ளூராட்சிச் சபைகள் பற்றிய விரிவான வியாக்கியானமுள்ள சட்ட ஆக்கங்கள் செய்வதெனமுடிவு செய்யப்பட்டது.

### கல்வி

ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம்வரை தமிழ்மொழியில் கல்வி புகட்டப்படுவது.

### அரசாங்க சேவை

அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்வதற்குநடைபெறும் பரீட்சைகளைத் தமிழிலும் நடாத்துவது. இதில் தேறும் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட கால எல்லையில் உத்தியோக மொழியில் சித்தியடைவது. இதன் பின்னரே அவர்களுக்கு வேலை நிரந்தரப்படுத்தப்படும்.

### தொடர்புமொழி

அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும்போது தமிழ்மொழி மூலம் கல்வி கற்றோர் தமிழில் தொடர்புகொள்வதுடன் அவர்களுக்குத் தமிழிலேயே பதிலும் பெறும் உரிமை இலங்கை முழுவதும் இருக்கவேண்டும்.

### உள்ளூராட்சி சபைகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் தாங்கள் விரும்பின் தமிழ் மொழியில் கருமமாற்றப்படவேண்டும்

இத்தகைய வியாக்கியானங்களைக் கடந்த 25 வருட காலத்தில் மக்கள் மறந்துபோயிருப்பார்களென ஜனாதிபதி எண்ண இடமில்லை. சட்டசபை காலத்திலிருந்து இன்று வரை இந்த நாட்டின் முதிர்ந்த, மூத்த அரசியல் தலைவர் சமஷ்டி வேறு பண்டா செல்வா ஒப்பந்தம் வேறு என்பதை இன்று பண்டா செல்வா ஒப்பந்தம் சமஷ்டி ஆட்சி ஒப்பந்தம் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளமுடியாத தொன்றாகும்.

### வெளிநாட்டு வேலை

# பணமோசடி செய்த இளைஞர்

## பிடிவிருந்து பிறப்பித்தபின் பொலிசாரிடம் சிக்கினர்

(மட்டுவில்)

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக சிலபேரிடம் பணமோசடி செய்ததாகக் கூறப்படும் ஒருவர் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரிடம் சிக்கினர்.

மட்டுவிலைச் சேர்ந்த மூன்று இளைஞர்களிடம் 51,000 ரூபாவைப் பெற்றுக்கொண்டு இவர் இரண்டு வருடங்களாக ஏமாற்றித் திரிந்தாராம். இதனை அடுத்து இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதிலும் இவர்விசாரணைக்கு வராததால் நீதிமன்றம் மூலம் இவருக்கு பிடிவிருந்து பிறப்பிக்கப் பட்டது. இதனை அடுத்து யாழ். விசேட குற்றத்தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. கே எஸ். பிள்ளை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இவரைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தது.

கொக்குவிலைச் சேர்ந்த த. கதிரவேலு பேரம்பலம் என்பவரே இப்படி பணமோசடி செய்தவராகும். இவரைப் பொலிசார் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் முன்னிலையில் இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு தாம் அப்பணத்தை தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்துவதாகத் தெரிவித்தார்.

நீதவான் இதற்குச் சம்மதம் தெரிவித்து அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். தம்மைப் பிணையில் விடும்படி அவர் விடுத்த கோரிக்கையும்வு ஏற்றுக் கொண்ட நீதவான் 51,000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கிய போதிலும் இவரைப் பிணையெடுக்க யாரும் முன்வராமையால் அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி இளம் கலைஞர்மன்றத்தினரால் கலைஞர் 'ரும் சின்னத்துரை ஞாபகார்த்த விழா நாளை மாலைநவாலி மு. ச. ச. நி. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. ஐ. சாக் இன்பராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. சீ. ஜெயரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இம்மன்றத்தினுல் திரட்டிய நிதி விழாவில் வைத்து அன்னரின் குடும்பத்துக்கு வழங்கப்படும். (சு)

### அகதிகள் புனர்வாழ்வு நிதியம்:

## திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மேற்பார்வையில் இயங்கும்

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம். சி.ஏ. மண்டபத்தில் இதுவரை இயங்கிவந்த ''அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983'' என்ற இயக்கத்தின் செயல்பாடுகள் யாவும் யாழ்ப்பாணம் செயலகத்தில் பணிபுரியும் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் எஸ். சிவதாஸனின் நேரடி மேற்பார்வையின் கீழ் இனிமேல் தொடர்ந்து செயல்படவிருக்கிறது.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983'' விண்ணப்பப்படிவத்தில் தமது விபரங்களைக் கொடுத்தவர்களின் விபரங்கள் தற்போழுது பரிசீலனைசெய்யப்பட்டுவருவதுடன் சமீபத்தில் நடைபெற்ற வன்செயலால் இறந்துபோனவர்களின் சார்பில் அவர்களது குடும்பத்தினருக்கும் இறந்தவரை நம்பியிருந்தோருக்கும் இந்நிதியத்தின் சார்பில் நன்கொடைகளும், புடவைகளும் வழங்கப் பட்டுவருகின்றன.

இதனைத்தொடர்ந்து வன்செயலால் மிகவும் பாதிக்கப் பட்டவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. (க)

## உடைகள் வழங்க ஏற்பாடு

(அரியாலை)

வன்செயலால் பாதிக்கப் பட்ட நிலையில் யாழ்ப்பாணப் பகுதிக்குத் திரும்பிய அகதிகளுக்கு உடைகள் வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் நிர்வாகிகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

பாதிக்கப்பட்ட நிலையில் உறவினர்களின் இல்லங்களில் தங்கியிருக்கும் குடும்பத்தவர்களுக்கு உடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இம்தமாதம் 1ம் திகதி நெடுந்தீவுப் பகுதியிலும் 2ம் திகதி சண்டிலிப்பாய் பகுதியிலும் நாலாம் திகதி கோப்பாய்ப் பகுதியிலும் உடைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க நிர்வாகிகளில் ஒருவரான திரு. பீற்றர் தெரிவித்தார்.

## தாயார் கண்டித்ததால் மகள் தற்கொலை!

(கிளிநொச்சி)

அயலில் உள்ள இளைஞர் ஒருவருடன் நட்புக்கொண்டிருந்த 18 வயது மகளை தாய் கண்டித்தார். அதைப் பொறுக்காத மகளோ நச்சுத்திராவகத்தை அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

முரசுமோட்டையைச் சேர்ந்த கந்தையா விஜயலட்சுமி என்பவரே மரணமானவராவார். இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப்பகுதிமரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்த ஜனுப் ஆர். ரி. பரீத் ஆஜர்செய்தார் பிரேத பரிசோதனையை கிளிநொச்சி சட்டவைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா மேற்கொண்டார்.

மரணமானவரின் தாய் திருமதி க. பராக்கிரமதேவி சாட்சியமளிக்கையில்; மரணமான மகள் அண்மைக் காலமாக அயலில் உள்ள இளைஞர் ஒருவருடன் தொடர்புகொண்டிருந்தார் என்றும் இதைவிரும்பாத தான் மகளைக் கண்டித்ததாகவும், ஆத்திரத்தில் மகள் கிருமி நாசினியை அருந்திவிட்டார் என்றும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லமுன்னர் மரணமாகிவிட்டார்என்றும்கூறினர் தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. (ச)

### புங்குடுதீவு

## குண்டுவெடிப்புச் சம்பவம்: சுவரொட்டி மூலம் விளக்கம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இரு வாரங்களுக்குமுன் தொடர்ச்சியாக நடந்த எட்டு குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு தாங்களே காரணம் என 'சமூக சீர் திருத்த இயக்கம்' உரிமை கொண்டாடி சுவரொட்டிகள் மூலம் தெரியப்படுத்தியுள்ளன

இச்சம்பவத்தின் பின்னணியிலே தங்களால் மது சட்ட விரோத விற்பனை பட்டைச் சாராய தயாரிப்பு விற்பனை என்பவற்றுடன் கொள்ளை இலாபமீட்டும் வர்த்தகர்களையும் எச்சரித்து நியாயமான மனிதாபிமான முறையில் நடந்து கொள்ளும்படி கேட்டதை உதாசீனம் செய்தமையே இக்குண்டு வெடிப்புக்குக் காரணமாம்.

இக்குண்டு வெடிப்பின்மூலம் பொது மக்களுக்கும் தேசத்ரோகிகளுக்கும பொருளாதார, உடல் உள ரீதியான பாதிப்பை தற்சமயம் ஏற்படுத்த தாங்கள் விரும்பவில்லை என்றும் தொடர்ந்தும் விற்பனையில் ஈடுபட்டால் சாராயக் குதங்களும், சாராய விற்பனை நிலையங்களும் தகர்க்கப் படும் எனவும் கோஷமிட்டுச் சென்றனராம்.

இச்சம்பவத்தின்போது ஐந்து மோட்டார் சைக்கிள்களும், ஒரு டெலிக்கா வானும் பயன் படுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (க)

## யாருடையது?

யாழ்ப்பாணம் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. கே. தங்கராசா என்பவர் சிறிது பணத்துடன் கூடிய பேர்ஸ் ஒன்றினை றக்கா வீதியில் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிபெற்றுக்கொள்ளவும்.



**ராஜா** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
பசுமையராஜ் — அம்பிகா
க்ளைப்பட்டி இமிகாரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

**ஹரன்** (யாழ்.நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30 6-15
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 5-30, 9-30
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15
4-45 and 7-00 p. m.
IMPOSSIBLE KID
(adults only)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
**ENTER THE DRAGON**
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்

**சாந்தி** யாழ்நகர்
10-30, 2-15, 4-45, 7-00
BURT REY NOLDS
IN A DUAL ROLE
**"Sharky's Machine"**
Color- Action Filled
—Adults Only—

2 தினங்கள் மட்டும்
**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
விஜயா - ரங்கராவ்
**கற்பகம்**
3—7-10-83
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
**பெரிய இடத்து பெண்**

**மனோகரா**
(யாழ்நகர்)
10-30, 2-15, 4-45,
7-00 p. m.
Robert Redford
Yaphet Kotto
Jane Alexander and
Murray Hamilton
**BRUBAKER**
The most wanted man
in Wakefield Prison

**ரீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00 மணி
எம் ஜி.ஆர்.. லதா,
(இரு வேடங்களில்)
மஞ்சுளா, நம்பியார்,
அசோகன்
**நேற்று இன்று நாளை**
—ஈஸ்ட்மென்கலர்—

# நெடுந்தீவில் மேசன் பயிற்சி நிலையம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மீண்டும் மேசன் பயிற்சி நிலையம் நெடுந்தீவு கிழக்கில் திறக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது. முன்பு நெடுந்தீவு மத்தியிலும் நெடுந்தீவு மேற்கிலும் இயங்கிய இந் நிலையம் இடையில் புங்குடுதீவுக்கு மாற்றப்பட்டு மீண்டும் நெடுந்தீவு மேற்குல் இயங்கி தற்போது நெடுந்தீவு கிழக்கிற்கு மாற்றப்பட்டு முதல் முதலாக இயங்க ஆரம்பித்துள்ளது.

ஆறு மாதங்களுக்கான இப் பயிற்சி மொத்தம் இருபது வாலிபர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

அண்மைக் காலத்தில் இப் பயிற்சிக்கு பெரும் மதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பயிற்சியாளர்கள் இலகுவாக தொழில் பெற்றுக்கொள்வதோடு நல்ல ஊதியத்தையும் பெறுவதாக இப்பயிற்சிக்கு பொறுப்பான தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் நெடுந்தீவுக்கு வருகை தந்தபோது கூறினார் — இப் பயிற்சிபெறும் வாலிபர்களுக்கு தினமும் ஐந்து ரூபா சிறு ஊக்கு ஊதியமாக வழங்கப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறினார். (க)

## தனியார்துறை ஊழியருக்கு நிவாரணம்!

(யாழ்ப்பாணம்)

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கு போதியளவு நிவாரணம் அளிக்கப்படவில்லையென்பதையும் அவர்களில் பலர் வேலையிழந்திருப்பதையும் பாதிக்கப்பட்ட ஊழியர் குழு அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியதையடுத்து அவ்வூழியர்களுக்குநிவாரண உதவிகளை வழங்க தொழிற்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்தகைய நிவாரணங்களை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட தனியார்துறை வர்த்தக நிறுவனம், சிறு வர்த்த ஸ்தாபனங்கள், தொழிற்சாலை ஊழியர்கள், தனியார்துறை பாடசாலை ஆசிரியர்கள், தோட்டத்துறை ஊழியர்கள் ஆகியோரின் தகவல்களை திரட்டி தொழிற் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட ஊழியர்குழுநடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 54, ஜும்மா பள்ளிவாசல் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப்படிவங்களின் மூன்று பிரதிகளை பூரணப்படுத்திக் கொடுக்குமாறு பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (மா)

## அகதி முகாமுக்குள் நள்ளிரவில் புக முயன்ற இளைஞர்

(மன்னார்)

பேசாலை அகதிகள் முகாமில் தங்கியிருந்த இளம்பெண் ஒருவர்மீது விருப்பம் கொண்டநபரொருவர் நள்ளிரவுநேரம் அகதிகள் முகாமுக்குள் பிரவேசிக்க முயற்சித்தபோது பேசாலை கிராமசேவை அலுவலரிடம் அகப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பேசாலை கிராமசேவை அலுவலர் அகதிமுகாமுக்கு ரோந்து சென்றபோது முகாமிற்குள் பிரவேசிக்க முயன்றவர் அகப்பட்டார்.

இவருடன் மேலும் இருவர் அகதிகள் முகாமுக்குள் பிரவேசிக்க முயன்றதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் முடிவில் கிராமசேவை அலுவலரிடம் அகப்பட்ட சந்தேகநபர் அகதி முகாமில் தங்கியிருந்த இளம் பெண்ணிடம் மன்னிப்புக் கோரியதுடன் தண்டனையாக அகதி முகாமிற்கு வாளி ஒன்றும் வாங்கிக் கொடுத்தார்.

**லதா** (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
சிவாஜி
நடித்த
**சரஸ்வதிசபதம்**

## பல்கலைக்கழக மாணவர் கூடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் பல்கலைகழகங்களிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுடன் புதிதாக பல்கலைக் கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் இணைந்து இம்மாதம் 5-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் - பல்கலைக் கழகத்தில் கூடி தமது எதிர்காலம் குறித்து ஆராயவுள்ளனர். (மா-சூ)

## காந்தி நினைவுப் பிரார்த்தனை

(சாவகச்சேரி)

தந்தை செல்வா அறங்காவல் குழுவும், அறவழிப் போராட்டக்குழுவும் இணைந்து மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகிய அக்டோபர் 2ம் திகதி காந்தி நினைவுப்பிரார்த்தனையையும், கருத்தரங்கினையும் நடாத்தவுள்ளன.

கைதடியில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியினை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆரம்பித்து வைக்கவுள்ளார். தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவர் பேராசிரியர் கு நேசையா தலைமையில் பிரார்த்தனையும் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. (சூ)

## இளம் பெண் தற்கொலை!

[மன்னார்]

தொய்வு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த 28வயதுப்பெண்மணி ஒருவர் கிருமிநாசினி அருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

மன்னார் கற்கடந்த குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனியாபிள்ளையே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராகும்.

இம்மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பொலிஸ் பாதுகாப்புடன் ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பகுதியிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாதத்திற்கான ஓய்வூதியப் பணம் சங்கானை தபால் நிலையத்தில் வைத்துபலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் அளித்த பாதுகாப்பின் மத்தியில் சுமார் 300 பேருக்கு இந்த ஓய்வூதியப்பணம் வழங்கப்பட்டது.

மானிப்பாய் தபால் நிலையம் அண்மையில் அங்கு இடம்பெற்ற கொள்ளைச்சம்பவத்தை அடுத்து மூடப்பட்ட நிலையில் உள்ளது.

## விசேட அபிஷேகம்

(சுழிபுரம்)

அளவையூர் கூட்டுறவாளர் வீதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பசுபதீஸ்வரப் பெருமானுக்கு இம் மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் விசேட அபிஷேகம், ஹோமத்தீ வளர்த்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. ஹோமத்தீயில் அடியார்களின் வேண்டுதல் இடப்படும். வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையாரின் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

## இலவச வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜீ. சீ. ஈ. வகுப்பு மாணவர்களின் பலன் கருதி காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் விடுமுறைகால விசேட வகுப்புக்களை அதே வித்தியாலய ஆசிரியர்கள் இலவசமாக நடத்தி வருகிறார்கள்.

## அகதிகளுக்கு உடுபுடைவை, நிதி அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் இருக்கும் 12 குடும்பங்களுக்கும் உதவி வழங்குமுகமாக பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் 3000 ரூபா பணமும் உடுபுடைவைகளும் வழங்கியுள்ளது.

இப்பணத்தையும் உடுபுடைவைகளையும் சங்கத் தலைவர் திரு கே. சிவப்பிரகாசம், பொது முகாமையாளர் திரு சத்தியநாதன் ஆகியோர் பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுக் குழுத்தலைவர் திரு மு. பொ. வீரவாகு திட்ட அலுவலர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் ஆகியோரிடம் கையளித்தனர். (க)

## இடமாற்றம்

(மன்னார்)

யாழ் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிய திரு பி. அன்ரனிப்பிள்ளை இம்மாதம் முதல் பேசாலை ரயில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## முதலாவது பிறந்த தினம்



**ஸ்ரீஷயானு**

கொய்யாத்தோட்டம் புது வீதி ஜெகநாதன் தம்பதிகளின் செல்வப் புதல்வி "ஸ்ரீஷயானு" இன்று (1-10-83) தனது முதலாவது பிறந்த நாளை கொக்குவில் பிரம்படியில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவர்ஸ்ரீ நாராயணன் அருள்பெற்று நீடூழி வாழ்களன உற்றார் உறவினர் வாழ்த்துகிறார்கள்.

9038

**Vacancy For Assistant Foreman**

கண்ணாடித் தொழிற்சாலையில் Shiftல் வேலைசெய்வதற்காக Assistant Foremanக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகமைகள்:-

(a) G. C. E. A/L வரை படித்திருக்கவேண்டும்.
(b) ஆகக் குறைந்தது ஐந்து வருட Work Shop அல்லது Industrial அனுபவம் இருத்தல்வேண்டும்.
(c) வயது 25—35க்கு மிடைப்பட்டவராக இருத்தல்வேண்டும்.

கண்ணாடித் தொழிற்சாலையொன்றில் அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். திறமைக்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும். சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி**

(8916)

**இம்மா** | **நீர் இறைக்கும் இயந்திரங்கள்**

மின்சாரத்தாலும், மண்ணெண்ணையாலும் இயங்கவல்லவை.
எஞ்ஜின் பம்புகளுக்கு வில்லியர்ஸ் அல்லது றெபின் எஞ்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன.
மின்சார பம்புகளுக்கு சைனா மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.
பித்தளை, அலுமீனிய உலோகங்களினால் திறம்பட உள்ளூரில் தயாரிக்கப்பட்டு
ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்கப்படுகின்றன.
உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பாவித்து உள்ளூர் உற்பத்தியாளருக்கும், உங்கள் மக்களுக்கும் உதவி புரியுங்கள்.
இரும்பு அலுமாரிகள், மேசைகள், கதிரைகள் வேறும் பல, பல

**இம்மா என்ரபிறைசஸ் லிமிட்டெட்**

558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134

# ''அண்மைக் கலவரங்களுக்கு 13 ராணுவ வீரர்கள்கொலை காரணமல்ல!''

—ஜனதிபதி

(கொழும்பு)

''ஜுலையில் இடம் பெற்ற கலவரங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதற்கும் எதுவித தொடர்பும் இல்லை'' என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கடுவெல தொகுதியில் நவீன மாதிரிக் கிராம மொன்றை ஜனதிபதி ஜயவர்த்தன திறந்து வைத்தார். அப்போது அங்கு நடைபெற்றபொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''ஜுலை 23ந் திகதி யாழ்ப்பாணத்தில் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதற்கும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இனக்கலவரங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை.

இனக்கலவரங்கள் முற்றிலும், அரசாங்கத்தை கவிழ்க்கச் செய்யும் விதத்திலேயே அரசுக்கெதிரான சக்திகளால் மேற்கொள்ளப்பட்டன வடக்கிலும் தெற்கிலும் உள்ள பயங்கரவாதிகள் ஒன்ருக இணைந்து அரசுக் கெதிராக தயாரித்த சதித்திட்டம் பற்றி விரைவில் அம்பலப்படுத்தப்படும். அவர்கள் மீண்டும் இந்நாட்டில் கலவரமொன்றை சிளப்பிடவே முயன்றதை பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா எகலியகொட இடைத் தேர்தல் பிரசாரங்களில் அரசுக்கெதிராகவே பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுவது பற்றிக் குறிப்பிட்டார்.

அவர் தாம் வெற்றி பெற்ருல் தடுப்புக் காவலிலுள்ள வடபகுதி பயங்கரவாதிகளை விடுதலை செய்யப் போவதாகவும், அவர்களுடன் சேர்ந்து அரசை எதிர்க்கப் போவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே அவரது இப் பிரசாரத்திலிருந்து அரசைக் கவிழ்க்க ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டிருந்தது தெளிவாகியுள்ளது அத்திட்டத்தின் ஒருபகுதியே ஜுலை கலவரங்களாகும். அக்கலவரங்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவவீரர்கள் கொல்லப்பட்டதையடுத்து திடீரென தோன்றவில்லை. அச்சம்பவத்துக்கும் கலவரத்துக்கும் எதுவித தொடர்புமில்லை' என்ருர். (கி)

## சிங்கள மகாசபை போராடும்

(கொழும்பு)

''அரபுநாடுகளில் சிங்களப் பணிப் பெண்கள் கொடுமைப் படுத்தப்படுவதை சிங்கள மகா சபை எதிர்த்துப் போராடும்'' என சிங்கள மகா சபையினரால் வெளியிடப் பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் வகையிலும், இன ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும் பல தகவல்கள் அடங்கியுள்ளன.

## தமிழ் மக்களின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களுக்கும் காயம்பட்டவர்களுக்கும் நஷ்டஈடுவழங்க வேண்டும்.

மக்களிடையே வளர்ந்து வரும் தம்மைத் தாமே ஆளும் விருப்பத்தை நிறைவேற்ற நாட்டைப் பிரிக்காத வகையில் ஒற்றை ஆட்சியின்கீழ் வசதிசெய்து கொடுக்க வேண்டும்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசின் ஆதரவுடன் இயங்கி வரும் 'தனிப்பட்ட தாக்குதல் படையைக்' கலைக்க வேண்டும்,

பஸ், ரயில் போக்குவரத்து கட்டணங்களை மீண்டும் அண்மையில் அதிகரிக்கப்பட்டபோது இருந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

## முதலாவது தமிழ் கம்பியூட்டர்

(சென்னை)

தமிழில் இலகுவாக மொழிபெயர்க்கவும் அன்ருட அலுவல்களை தப்பின்றி செய்யவும் புதிய தமிழ் கம்பியூட்டர்கள் முதல்தடவையாக சென்னையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

புதுடில்லியிலுள்ள டி. சி. எம். நிறுவனம் உற்பத்திசெய்துள்ள இக்கம்பியூட்டர்கள் முதலில் சென்னையிலே விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. முதல் கம்பியூட்டரை தமிழக நிதி அமைச்சர்திரு. நாவலர் நெடுஞ்செழியன் தனது அமைச்சுக்காகக் கொள் முதல் செய்துள்ளார். ''திருவள்ளுவர்'' என் பெயரில் அறிமுகமாகியுள்ள.

இக்கம்பியூட்டரின் விலை ஒரு லட்சம் ரூபாவாகும்

தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் மொழி பெயர்ப்புத் துறைக்கு இக்கம்பியூட்டர்கள் பெருமளவில் கொள் முதல் செய்யப்படவுள்ளது. சாதாரணமாக, ஒரு நூலை ஒரு மணித்தியாலயத்தில் இக்கம்பியூட்டர் மொழிபெயர்க்கும் திறனும், சிக்கலின்றி கணக்குவகைகளை தொழிற்படும்சக்தியும் கொண்டது.

## மரண அறிவித்தல்

### தெய்வேந்திரம்பிள்ளை

கொக்குவில் மேற்கு பரமசிவம் மில் அதிபர் தெய்வேந்திரம்பிள்ளை காலமானர். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற நாராயண பிள்ளையின் மூத்த மகனும், மதீசன், சுதாமதி ஆகியோரின் தகப்பனும், நாகேஸ்வரியின் மகனும், இராசேந்திரம்பிள்ளை, பரமசிவம்பிள்ளை, இரத்தினேஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் சகோதரரும். தம்பிஐயா காங்கேசன் சிமெந்து ஆலை பொறியியலாளரின் மைத்துனரும், உடுவில் சுப்பிரமணியத்தின் மருமகனும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 12-00 மணிக்கு கோம்பையன் மயானத்தில் நடைபெறும். 9051

## மரண அறிவித்தல்

### திரு. சிற்றம்பலம் முருகேசு

வட்டுக்கோட்டை மூளாய் ரேட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சிற்றம்பலம் முருகேசு 30-9-83 இல் காலமானர். இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினம், இரத்தினேஸ்வரி, தவனேஸ்வரி, மகாலிங்கம், புனிதவதி, மனேரஞ்சிதமலர், மனேகரநாதன் (பாபு) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமணி, சிதம்பரநாதன், பாலசுப்பிரமணியம், சரோஜினிதேவி, விஸ்வேஸ்வரன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனருமாவர். ஈமக்கிரியைகள் (01-10-83) இன்று காலை 10 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 9050

## யாழ். அபிவிருத்தி-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

இத்திட்டத்தின் இறுதி ஏற்பாடுகளைக் கவனிப்பதற்தாக 6பேர் அடங்கிய குழு ஒன்று அடுத்தமாதம் முதல்வாரத்தில் மேற்கு ஜெமனியிலிருந்து யாழ்ப்பாணம் வர இருந்தது.

இந்நிலையில் நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பாரிய அபிவிருத்தித் திட்டம் கைவிடப்பட்டதாக இலங்கையிலுள்ள ஜெர்மன் தூதரகமும் மேற்படி ஜெர்மன் நிறுவனமும் இப்போது அறிவித்துள்ளது.

ஒருவருடத்தில் மேற்படி நிறுவனம் உலகில் உள்ள நான்கு சிறிய நாடுகளில் இது போன்ற திட்டங்களை மேற்கொண்டு வருகிறது என்றும் இனக்கலவரம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு கிடைக்க இருந்த பாரிய அபிவிருத்தித் திட்டம் ஒன்று கைநழுவி விட்டதென்றும் இதற்காகப் பாடுபட்ட அதிகாரி ஒருவர் கூறினர்.

## இப்படியும் நடக்கிறது

நன்றி உடையவர்கள் யார்?

நாயா? மனிதனு?

செய்தித்துறையில் நாம் படித்தது...... நாய் மனிதனைக் கடித்தால் செய்தியல்ல! மனிதன் நாயைக் கடித்தால் செய்தி......

'ரைம்ஸ் ஒப் இந்தியா' (செப்டம்பர் 20) தினசரியில் கொழு கொழு நாயின் புகைப்படத்துடன் வெளிவந்த விளம்பரம் இது.

''சுவீற்றி... உன்னை எப்படி மறப்பேன். நீ இறந்தது செப்டம்பர் 16ல் ... உன்னைமறவாத - ஜனர்த்தனன், நிர்மலா......''

—ஊடுருவி

## தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ய ஜெமினி கணேசன் முயற்சி!

(சென்னை)

காதல்மன்னன் என்று ஒரு காலத்தில் தமிழக சினிமா உலகில் அழைக்கப்பட்ட ஜெமினி கணேசன் தன்னைத் தானே றிவோல்வரினல்சுட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்தார்!

இவர் இப்போது ஆபத்தான நிலையில் நுங்கம்பாக்கம் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகிருர்!

தனது வீட்டில். தன் கழுத்துக்குக் குறிவைத்துச் சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றதாகவும், இன்னும் ஆபத்துக் கட்டத்தை தாண்டவில்லையென்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வருகிறது.

## இனக்கலவரம் பாதித்த தொழில் நிறுவன புனரமைப்பு: உலகவங்கி ரூ. 10கோடி உதவி

(கொழும்பு)

ஜுலை, ஆகஸ்ட் இனக் கலவரங்களின்போது நாசமாக்கப்பட்ட தொழில் ஸ்தாபனங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு உலக வங்கி 10 கோடி ரூபாய் அனுமதித்திருக்கின்றது.

இலங்கை அரசுக்கு உலக வங்கி ஏற்கனவே வழங்கியுள்ள கடன் கடன்களில் 10 கோடி ரூபாவை மேற்படி புனர் நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள அந்நிறுவனம் அனுமதி வழங்கியிருக்கிறது.

தற்பொழுது வெளிநாட்டிலுள்ள இலங்கை நிதிமந்திரி திரு. ரெனிடி மெல் உலக வங்கித் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் பலனுக உதவிகிடைத்துள்ளது.

## கடற்படையினர் கைதுசெய்த இந்திய மீனவர் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் முத்துநாடார் இராமலிங்கம் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி ஜே.ஜி. ஆசீர்வாதம் அவரை விடுதலைசெய்தார்.

மீனவரிடமிருந்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட வள்ளத்தை ஊர்காவற்றுறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கும் படியும், பின்னர் வள்ளத்தின் உரிமையாளரிடம் வள்ளத்தைத் திரும்பவும் கையளிக்கும் படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

ஜுன் 14ம் திகதி சந்தேக நபரான இந்திய மீனவர் எம். இராமலிங்கம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபொழுது சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இவரின் நலனைக் கவனிப்பதற்காக ஆஜராகி வாதாடிவந்தது குறிப்பிடத்தக்கது.

அரசதரப்பில் அரசசட்டத்தரணி சிறீஸ்கந்தராசா ஆஜரானர். (மா-கு)

## விஞ்ஞான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான சகல பணிகளையும் யாழ். டாக்டர் ஜே. பி. சி. பிலிப் செய்து வருகிருர்.

## யாழ்ப்பாணத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோர் உரைநிகழ்த்தவுள்ளனர்.

யாழ். மாவட்ட அமைச்சரும் தம்பதெனியா பாராளுமன்ற உறுப்பினருமான திரு. யூ. பி. விஜயகோன், ஞாபகார்த்த உரைநிகழ்த்தி, முத்திரையை வெளியிட்டுவைப்பார். (மா)

## அமெரிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருக்கு மிடையிலான பேச்சுவார்த்தையின் போது இரு தரப்புக்கும் பரஸ்பர நன்மைதரக்கூடிய விடயங்கள் பற்றி உரையாடப்பட்டது.

## அகதிகளுக்கு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொடுத்து அகதிகளுக்கான பொருட்களை அபகரித்துக் கொண்டோரைப் பற்றியும் அபகரிக்க முயல்பவர்களைப் பற்றியும் தமக்கு தெரிவிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இப்படியான தகவல்களைத் தருவோர் பற்றிய விபரங்கள் இரகசியமாக வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under Number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.